



# தொழில் துறை

## சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

## மானியக் கோரிக்கை எண். 27

அறிவிப்புகள்

2019–2020

# தொழில் துறை

## சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

மானியக் கோரிக்கை எண். 27

அறிவிப்புகள்
2019–2020

சி.வி.சண்முகம்
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்

## தொழில் துறை
## சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

## அறிவிப்புகள்
## 2019 – 2020

### 1. புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலர்களுக்கு ரூபாய் 26 இலட்சம் மதிப்பில் கையடக்கக் கணினி வழங்குதல்

கனிம நிர்வாகத்தினைக் கணினி மூலம் நிர்வகித்து மேம்படுத்திடவும் கள ஆய்வு மேற்கொள்ளவும் மற்றும் சட்ட விரோத குவாரிகளை கட்டுக்குள் கொண்டுவரவும் 32 மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலர்கள், புவித்தொழில்நுட்ப மையத்தில் பணிபுரியும் 2 அலுவலர்கள், 3 பறக்கும் படை அலுவலர்கள் மற்றும் தலைமையகத்திலுள்ள கனிம ஆய்வுப் பிரிவிலுள்ள 2 அலுவலர்கள் ஆக மொத்தம் 39 அலுவலர்களுக்கு **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 26 இலட்சம் மதிப்பீட்டில் 39 கையடக்கக் கணினிகள் வழங்கிட இந்நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 2. ஆளில்லா சிறிய ரக விமானம் மூலம் சுரங்கங்களை கண்காணித்தல்

விதிமுறைகளுக்கு புறம்பாக எடுக்கப்படும் கனிமங்களின் கனபரிமாணத்தை துல்லியமான முறையில் அளவீடு செய்ய ஆளில்லா சிறிய ரக விமானம் மூலம் சுரங்கங்கள் மற்றும் குவாரிகள் கண்காணிக்கப்படும். இதன்மூலம் சட்டவிரோத குவாரிகள் கட்டுப்படுத்தப்பட்டு அரசிற்கு ஏற்படும் வருவாய் இழப்பு தடுக்கப்படும். அண்ணா பல்கலைக்கழக சென்னை தொழில்நுட்ப நிறுவனத்துடன் (MIT) புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் இந்நிதியாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.



## 3. செயற்கைக்கோள் மூலம் சுரங்கங்களை கண்காணிக்கும் அமைப்பினை சிறுகனிமங்களுக்கும் அறிமுகம் செய்தல்

பெருங்கனிமச் சுரங்கங்கள் அமைந்துள்ள குத்தகை பரப்பின் எல்லைகளிலிருந்து 500 மீட்டர் சுற்றளவிற்குள் நடைபெறும் சட்டவிரோத சுரங்கப்பணிகளை செயற்கைக்கோள் மூலம் அகமதாபாத்திலுள்ள பாஸ்கராச்சாரியா புவி மற்றும் விண்வெளி ஆய்வு நிறுவனம் (BISAG) கண்காணித்து வருவதுடன் நடைபெறும் விதிமீறல் குறித்து பெறப்படும் சமிக்ஞைகள் கள ஆய்வின் மூலம் உறுதி செய்யப்படுகிறது. இத்திட்டம் **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** சிறுகனிம குவாரிகளுக்கும் இந்நிதியாண்டில் அறிமுகப்படுத்தப்படும்.

## 4. குவாரி தொழிலாளர்களை தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டுவருதல்

கனிம வளம் மிகுந்த தமிழ்நாட்டில் 503 பெருங்கனிம குத்தகைகளும் மற்றும் 3,306 சிறுகனிம குத்தகைகளும் நடைமுறையில் உள்ளன. இதில் பெருங்கனிம சுரங்கங்கள் மற்றும் சிறுகனிம குவாரிகளில் பணிபுரிந்து வரும் சுமார் 34,500 தொழிலாளர்களின் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு மேற்படி தொழிலாளர்களை தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து சம்பந்தப்பட்ட வாரிய காப்பீட்டு திட்டம் மற்றும் மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா என்ற காப்பீட்டு திட்டத்தின் கீழ் கொண்டுவர **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** இந்நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



## 5. சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் இணை இயக்குநர் மண்டல அலுவலகத்திற்கு ரூபாய் 2 கோடி திட்ட மதிப்பில் புதிய கட்டடங்கள் கட்டுதல்

கனிம நிர்வாக நலன் கருதி நான்கு மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், சேலம், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நிதியாண்டில் சேலம் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** புதிய மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் ரூபாய் 2 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 6. கனிம ஆய்வு பணியினை திறம்பட மேற்கொள்ள ஒரு கூடுதல் இயக்குநர் பணியிடத்தினை பதவி நிலை உயர்வின் மூலம் உருவாக்குதல்

கனிம வளமிக்க இடங்களை கண்டறிந்து, கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் (மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல்) திருத்த சட்டம், 2015–ன்படி, ஆய்வு மேற்கொண்டு தற்போதுள்ள விதிகளின்படி பொது ஏலத்திற்கு கொண்டு வந்து அரசுக்கு கனிம வருவாய் அதிகரிக்கச் செய்ய வேண்டியது அவசியமாகிறது. மேற்படி பணியினை திறம்பட மேற்கொள்ள **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ஒரு கூடுதல் இயக்குநர் பணியிடம் ஒரு இணை இயக்குநர் பதவியை ஒருநிலை உயர்த்துவதன் மூலமாக உருவாக்கப்படும்.

**சி.வி.சண்முகம்**
**சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்**
**சிறைச்சாலைகள் துறை அமைச்சர்**